**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 115 /2023**

**Prosecution witness : அ.சா. 37** **Date : 23.02.2026.**

| | |
|---|---|
| **Name : பெருமாள்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**Accused absent. Petition filed and allowed**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஓமலூர் அரசு மருத்துவமனை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக உள்ளேன். கடந்த 2016-ம் வருடத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, கடந்த 06.09.2016-ம் தேதியன்று பகல் 12.15 மணிக்கு குற்றஎண்.292/2016 என்ற எண் தொடர்புடைய சாலை விபத்தில் இறந்துபோன ராஜ்குமார், வயது 23 என்ற ஆண் சடலத்தை தலைமைக்காவலர் ராஜா அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை பகல் 12.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

2) சடலம் மல்லாந்த நிலையில் காணப்பட்டது. கண்கள் மூடிய நிலையில் இருந்தது. உடல் விரைப்புத்தன்மையுடன் காணப்பட்டது. கை, கால்கள் நீட்டிய நிலையில் காணப்பட்டது. இவ்வாறாக பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் காயங்கள் குறிக்கப்பட்டது.

1. மூக்கில் ரத்தம் வழிந்து காணப்பட்டது.
2. 5 x 1 x 1 cm கிழிந்த காயம் இடது புருவத்தில் காணப்பட்டது.
3. 5 x 2 x 1 cm கிழிந்த காயம் பின்பக்க கபால பகுதியில் காணப்பட்டது
4. 1 x 0.5 cm சிராய்ப்பு காயம் வலது இடுப்பு பகுதியில் காணப்பட்டது.

5. இடது பக்க கையின் மேற்பகுதியில் சில சிராய்ப்பு காயங்கள் 0.5 x 0.5 cm அளவில் காணப்பட்டது. மேற்சொன்ன காயத்தினை நான் பிரேத பரிசோதனை செய்த போது இடது பக்க முன் மண்டை பகுதியில் கபால எலும்பு உடைந்து காணப்பட்டது. மூளை பகுதியில் ரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டது. கபாலத்தின் அடிப்பகுதி உடைந்து காணப்பட்டது. வலது பக்கம் இடுப்பு பகுதியில் எலும்பு உடைந்து காணப்பட்டது. மேற்கூறிய காயங்களால் இவருக்கு இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என சான்று வழங்கினேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** .

3) காவல் துறையினரின் வேண்டுகோளுக்கு இணங்க பிரேத பரிசோதனை செய்தேன் என்றால் சரிதான். அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**